இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 21.04.2026

# உண்மை தெரியுமா பிரதமரே?

“தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்று உள்ளே வருகிறது. தி.மு.க. வெளியேறுகிறது” என்று கோவை பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேசி இருப்பதைப் படித்தபோது அவர் எத்தகைய கற்பனை உலகத்தில் வாழ்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

**தமிழ்நாட்டில் பா.ஜ.க.வின் செல்வாக்கு என்ன என்பதை நயினார் நாகேந்திரனிடம் கேட்டு வாங்கிப் பார்த்து விட்டு, இந்த மாதிரி பேச வேண்டும் பிரதமர்.**

**தமிழ்நாட்டில் பா.ஜ.க.வின் அரசியல் வரலாறு என்ன என்பதை மாண்புமிகு பிரதமர் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.**

* 1984 நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு தொகுதியிலும் 1989 தேர்தலில் 3 இடங்களிலும், 1991 தேர்தலில் 15 இடங்களிலும், 1996 தேர்தலில் 37 இடங்களிலும் போட்டியிட்டு, ஒரு தொகுதியில் கூட தமிழகத்தில் பா.ஜ.க. வெற்றி பெறவில்லை.

* பா.ஜ.க. முதன்முறையாக 1996 சட்டசபைத் தேர்தலில் ஒரு இடத்தில் வென்று, சட்டசபைக்குள் நுழைந்தது.

* 1998 நாடாளுமன்றத் தேர்தலில் 5 தொகுதிகளை பா.ஜ.க.வுக்கு ஒதுக்கினார் ஜெயலலிதா. 3 தொகுதிகளில் பா.ஜ.க. வென்றது.

* 1999 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்தது பா.ஜ.க. அந்தக் கூட்டணியில் 6 தொகுதிகள் ஒதுக்கப்பட, 4 இடங்களில் பா.ஜ.க. வென்றது.

* 2001 சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. 21 தொகுதிகளில் போட்டியிட்டு, 4 இடங்களில் வென்றது.

* 2004 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு 7 தொகுதிகளை ஒதுக்கினார் ஜெயலலிதா. அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி 40 தொகுதிகளிலும் படுதோல்வி அடைந்தது.

* 2006 சட்டசபைத் தேர்தலில் தனித்து போட்டியிட்டது பா.ஜ.க. 225 தொகுதிகளில் போட்டியிட்டு, 221 இடங்களில் டெபாசிட் இழந்தது.

* 2009 நாடாளுமன்றத் தேர்தலில் எந்தத் தொகுதியிலும் பா.ஜ.க. வெற்றி பெறவில்லை.

* 2011 சட்டசபைத் தேர்தலில் 200-க்கும் அதிகமான இடங்களில் பா.ஜ.க. தனி அணியாகப் போட்டியிட்டது. 198 தொகுதிகளில் டெபாசிட்டை இழந்தது.

* 2016 சட்டசபைத் தேர்தலில் 188 இடங்களில் போட்டியிட்டு 180 தொகுதிகளில் டெபாசிட் இழந்தது பா.ஜ.க.

* 2019 நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து 5 தொகுதிகளில் போட்டியிட்டது பா.ஜ.க. இந்த முறையும் முழுமையாகத் தோற்றது. அ.தி.மு.க. ஒரே ஒரு தொகுதியில் மட்டுமே வென்றது.

* 2021 சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் போட்டியிட்ட பா.ஜ.க. 4 இடங்களில் மட்டுமே வென்றது.

* இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த - 2024 நாடாளுமன்றத் தேர்தலில் 21 நாடாளுமன்றத் தொகுதிகளில் டெபாசிட் போன கட்சிதான் பா.ஜ.க.. இதுதான் பா.ஜ.க.வின் தோல்விச் சரித்திரம் ஆகும்.

இதையெல்லாம் வாங்கிப் பார்த்து இருந்தால், தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமைக்கும் என்று பிரதமர் பேசி இருக்க மாட்டார்.

**ஒருவேளை பத்துத் தோல்வி பழனிசாமியை நம்பி, பிரதமர் இப்படி பேசுகிறாரா? 2019 முதல் நடைபெற்று வரும் அனைத்துத் தேர்தலிலும் தோற்றவர்தான் பழனிசாமி. இவரை எல்லாம் இன்னும் செல்வாக்கானவர் என்று நினைத்துக் கொள்கிறாரா பிரதமர்?**

ஜெயலலிதா காலத்தில் அ.தி.மு.க. வாங்கிய வாக்குச் சதவிகிதத்தை வைத்து, பழனிசாமியைக் கணிப்பது பெரிய அபத்தம். அன்றைய தினம் அ.தி.மு.க. வாங்கிய வாக்குகள் என்பவை, ஜெயலலிதா என்ற ஆளுமைக்காக கிடைத்தவை. அது எப்படி பழனிசாமிக்குக் கிடைக்கும்? தென் மாவட்டங்களுக்கு அவர் போனபோது அ.தி.மு.க. கொடியோடு கருப்புக் கொடியையும் சேர்த்து வைத்து பழனிசாமிக்குக் காட்டினார்கள் அ.தி.மு.க. தொண்டர்கள். இதுதான் பழனிசாமி கால அ.தி.மு.க. ஆகும்.

**2024 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 என வெற்றி பெற்றது தி.மு.க. கூட்டணி. இது தெரியாமல், தி.மு.க. தோற்கும் என்று சொல்வது உண்மையை அறியாத பேச்சு அல்லவா?**

அ.தி.மு.க.வும் - பா.ஜ.க.வும் ஒன்று சேர்ந்ததே வெற்றி என்று பிரதமர் நினைப்பாரே ஆனால், அதற்கும் பதில் இருக்கிறது. இருவரும் சேர்ந்து நின்ற தேர்தலிலும் தோற்று இருக்கிறார்கள். 2019 நாடாளுமன்றத் தேர்தலிலும், 2021 சட்டசபைத் தேர்தலிலும் அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் கூட்டணி அமைத்துத்தான் போட்டியிட்டன. கூட்டணியாகத்தான் தோற்றன.

**2024 நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் தனித்தனியாகப் போட்டியிட்டன என்பது உண்மைதான். இரண்டு கட்சிகளும் தனித்தனியாக வாங்கிய வாக்குகளைக் கூட்டிப் பார்த்தாலும் தி.மு.க. வாங்கியதை விட குறைவுதான். தி.மு.க. கூட்டணி 47 விழுக்காடு வாக்குகளைப் பெற்றது. அ.தி.மு.க. கூட்டணி 23 விழுக்காட்டையும், பா.ஜ.க. கூட்டணி 18 விழுக்காட்டையும் பெற்றது. அ.தி.மு.க.வின் விழுக்காட்டையும் பா.ஜ.க. விழுக்காட்டையும் கூட்டினால் 41 விழுக்காடுதான் வருகிறது. 47 ஐ தாண்டவில்லை. மாண்புமிகு மோடி அவர்கள் இந்தக் கணக்கை கேட்டு வாங்கிப் பார்க்கவும்.**

நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியை சட்டமன்றத் தொகுதி வாரியாகக் கணித்து அப்போதே ‘தி இந்து’ நாளிதழ் ஒரு கட்டுரை தீட்டியது.

**“222 சட்டமன்றத் தொகுதி வாரியாக தி.மு.க. கூட்டணி அதிக வாக்குகள் பெற்றுள்ளது” என்று ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் அதில் குறிப்பிட்டது. 32 மக்களவை தொகுதிகளை உள்ளடக்கிய 192 சட்டமன்றத் தொகுதிகளில் முழுமையாக தி.மு.க. கூட்டணியே அதிக வாக்குகளைப் பெற்று சாதனை படைத்துள்ளது என்றும் சொல்லப்பட்டது.**

மக்களவைத் தேர்தல் வாக்கு விவரங்களின்படி 8 சட்டசபைத் தொகுதிகளில் மட்டுமே அ.தி.மு.க. முன்னணியில் இருக்கிறது. 3 தொகுதிகளில் பா.ம.க. அதிக வாக்குகளைப் பெற்றுள்ளது. பா.ஜ.க. எந்த சட்டமன்றத் தொகுதியிலும் கூடுதல் வாக்குகளை வாங்கவில்லை.

**இது எதுவும் தெரியாமல், தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமைக்கும் என்று சொல்வது, தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வது ஆகும்.**





கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.4.2026) தமிழ்நாட்டில் சட்டமன்றப் பொதுத்தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள வருகை தந்துள்ள ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளரும், டெல்லி முன்னாள் முதலமைச்சருமான அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களை சந்தித்து பேசினார். இச்சந்திப்பின்போது, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு, ஆம் ஆத்மி கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் வசீகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

### கருத்துக் கணிப்புகள் - மக்கள் கணிப்புகள்

# எதிலும் நாம்தான் வெல்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஏப். 21 -**

**“கருத்துக்கணிப்புகள், மக்கள் கணிப்புகள் எதிலும் நாம்தான் வெல்வோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதியுடன் தெரிவித்துள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு: -

**நேற்று பிற்பகல் 2 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் பரப்புரை தொடங்க ஆயத்தமானேன்...**

**ஓசூரில் தொடங்கி, சென்னை எண்ணூரில் நேற்று இரவு 10 மணிக்கு பிரச்சாரத்தை முடித்தேன்.**

**ஓசூர் முடித்து மயிலாப்பூர், ஆயிரம்விளக்கு, தியாகராயர் நகர் ஆகிய தொகுதிகளில் சாலைகளில் மக்கள் வரவேற்பளிக்க சுமார் 5 கி.மீ. தூரத்துக்கு வீதி வீதியாக வாக்கு கேட்டுவிட்டு, இரவு திருவொற்றியூர் நெட்டுக்குப்பத்தில் வாக்குச் சேகரித்து மீனவச் சொந்தம் ஒருவரது வீட்டில் மீன் சாப்பிட்டதும்தான், நேற்றைய நாள் நிறைவுற்றது.**

**இப்போது, சூரியன் உதித்ததும் அண்ணா நகருக்குப் புறப்பட்டுவிட்டேன்...**



**கருத்துக் கணிப்புகள் மக்கள் கணிப்புகள் என எதிலும் நாம்தான்!**

**வெல்வோம் 200; படைப்போம் வரலாறு!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

### வேலூர் மாவட்டம் - காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் தீவிர வாக்குச் சேகரிப்பு!

# சேர்க்காடு அரசு மருத்துவமனை 100 படுக்கைகளுடன் மேம்படுத்தப்படும்!

## பிரச்சாரத்தில் அமைச்சர் துரைமுருகன் வாக்குறுதி!

வேலூர், ஏப். 21 -

வேலூர் மாவட்டம், காட்பாடி சட்டமன்றத் தொகுதி சேர்க்காடு அரசு மருத்துவமனை 100 படுக்கைகளுடன் மேம்படுத்தப்படும் என அமைச்சர், கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் வாக்குறுதி அளித்தார்.

வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தி.மு.க. சார்பில் வேட்பாளராக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் 11வது முறையாக போட்டியிடுகிறார். அவர் தொகுதி மக்களிடையே தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வாக்குகளைச் சேகரித்து வருகிறார்.

அதன்படி அவர் வரதராஜபுரம், கம்மவார்புதூர், உள்ளிப்புதூர், ஒட்டந்தாங்கல் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களுக்குச் சென்று கிராம மக்களை நேரடியாக சந்தித்து குறைகளைக் கேட்டறிந்தார்.

மேலும் அவர் மக்களுடன் அமர்ந்து தொகுதி வளர்ச்சிக்கு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் கலந்துரையாடினார். அரசின் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், ரூ.8 ஆயிரம் கூப்பன் வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள், வாக்குறுதிகளை மக்களிடையே எடுத்துரைத்தார்.

காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் சேர்க்காட்டில் உள்ள அரசு மருத்துவமனை 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மேம்படுத்தப்படும் என்றும், பெண்கள் பிரசவ வார்டுக்கு தனி கட்டிடம் கட்டப்படும் என்றும் பிரத்யேக டாக்டர்கள் நியமிக்கப்படுவார்கள் போன்ற பல்வேறு வாக்குறுதிகளை அளித்தார்.



அப்போது அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசியதாவது: -

காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஒவ்வொரு கிராமத்தையும் நகரத்துடன் இணைக்கும் வகையில் தார் சாலைகள் போடப்பட்டுள்ளது. தொகுதியின் வளர்ச்சிக்காக நான் எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். காட்பாடி தொகுதியில் அனைத்து பகுதிகளும் வளர்ச்சி பெற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளேன்.

இந்தத் தொகுதியில் அரசின் அனைத்து திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளன. கிராமப்புற மாணவர்களுக்கு கல்லூரி கொண்டு வந்துள்ளேன். வீட்டுமனை பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளது. தி.மு.க. அரசின் நல்லாட்சி தொடர உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, என்னை மீண்டும் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கு ஆதரவாக அவரது மருமகள் சங்கீதா கதிர்ஆனந்த் பல்வேறு பகுதிகளுக்கு சென்று பிரசாரம் செய்து வருகிறார். மக்களிடம், விவசாயிகளிடம், பெண்களிடம் நேரடியாக பேசி அரசின் திட்டங்களை எடுத்துரைத்து ஆதரவு திரட்டி வருகிறார்.

இந்தநிலையில் அவர் கல்புதூர், வண்டறந்தாங்கல் பகுதியிலும் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது இளைஞர்கள், பெண்களிடம் அரசு கொண்டு வந்துள்ள கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம், தமிழ்ப்புதல்வன், புதுமைப் பெண், நான் முதல்வன் திட்டங்கள் குறித்தும்,

காட்பாடி தொகுதியில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் குறித்து துண்டுப் பிரசுரங்களை வழங்கி உதயசூரியன் சின்னத்துக்கு வாக்குச் சேகரித்தார்.

நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.